விலை ரூபா 14.00 (கொழும்பு விலை17-00) Registered as a News Paper in Sri Lanka பக்கம் ஆறு


# வலம்புரி
VALAMPURI


மங்கையர் மனம்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளுக்கு
சாரங்கா
நகைமாடம்
177/4கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P;- 2480

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 7 வெள்ளிக்கிழமை (23-8-2002) தொலைபேசி 3378 ஒலி 247

## அரசு-புலிகள் பேச்சுக்கான திகதி ஓரிரு தினங்களில் அறிவிக்கப்படும்

### அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சு வார்த்தைக்கான திகதி இன்னும் ஓரிரு தினங்களில் அறிவிக்கப்படுமென அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மகாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:-

அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைக்கான திகதியை நோர்வே அரசாங்கம் இன்னும் ஓரிரு தினங்களில் வெளியிடவுள்ளது.

அதேவேளை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெறவுள்ள விசேட கலந்துரையாடல் சிலவற்றில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும் தாய்லாந்தில் முதலாவது கட்டப் (6 ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில்இன்று இந்தியாவுக்கு பயணம்

(இலண்டன்)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்க மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று இந்தியா செல்லவுள்ளார்.

இலங்கைக்கான முன்னாள் இந்தியத்தூதுவர் கோபால கிருஷ்ணகாந்தியின் மகளின் திருமணவீட்டில் கலந்து கொள்ளும் முகமாகவே பிரதமர் அங்குசெல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இத்திருமண வைபவத்தில் பிரதமர் ரணில் சிறப்புவிருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இந்தியாசெல்லும் அவர் கர்நாடகம் மற்றும் ஆந்திராப்பிரதேச முதலமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இலங்கையில் கணனித் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் இலங்கையர்களுக்கு கணனித் துறையில் பயிற்சிகளை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் தொடர்பாகவே இப்பேச்சுவார்த்தை இடம் பெறவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரீஸ் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையின் சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்து இந்திய அரசுத்தலைவர்களுடனும்பிரதமர் கலந்துரையாடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

(த)

# புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்

## அமெ. பிரதி அமைச்சரிடம் வலியுறுத்து

(அலுவலகச் செய்தியாளர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள். இந் நிலையில் அவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை அமெரிக்கா நீக்கவேண்டும்.**

**இவ்வாறு அமெரிக்க பிரதி இராஜங்க அமைச்சர் ரிச்சட் ஆமிடேஜிடம் யாழ், பொதுஅமைப்புப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆமிடேஜ் நேற்று யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்தார்.

அமெரிக்காவில் இருந்து இலங்கைக்குப் புறப்பட்ட இவர், காலை 9.15மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து உடனடியாக புறப்பட்டுபலாலி விமானநிலையத்தை 10.30 மணிக்கு வந்து சேர்ந்தார்.

இராஜாங்க அமைச்சருடன் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, பாதுகாப்பு அமைச் ... பெர்னாண்டோ, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்ஸ் மற்றும் தூதரக அதிகாரிகள் ஆகியோர் வருகை தந்தனர்.

தென்மராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்த ஆமிடேஜ், ...

## பேனாட் குணதிலகா விரைவில் வன்னிசெல்வார்

சமாதான செயலகப்பணிப்பாளர் பேனாட் குணதிலக விரைவில் வன்னிக்குச்சென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறை நடுவப்பணியகத்தில் இடம்பெறவுள்ள இப்பேச்சுவார்த்தையில் யுத்தத்தினால் அழிந்துபோயுள்ள வடபகுதியை புனர்நிர்மாணம் செய்வது குறித்தும் இதற்கு விடுதலைப்புலிகளின பூரணசம்மதத்தைப் பெறுவது குறித்தும் ஆராயப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ எல். பீரீஸ் நேற்றுதெரிவித்தார். (த)

## நாட்டை விற்கிறார் அமைச்சர் மொறகொட

### ஜே வி.பி செயலர் குற்றச்சாட்டு

அமெரிக்க அதிகாரிகள் இலங்கை வருவது சமாதானத்தை ஏற்படுத்தவென்று குறிப்பிடப்படுகிறது. இது ஒரு பெரிய பகிடி என்று ...

... பல வருடங்கள் கடந்திருக்க வேண்டும்.

ஆனால் இன்றுபாலஸ்தீன மக்கள் துன்பப்பட்டுக்கொண்டே இருக்கின்றார்கள் அவர்க ...

இலங்கைக்குப் புறப்பட்ட இவர், காலை 9.15மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தார். அங் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின்

தென்மராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்த ஆமிடேஜ், மற்றும் குழுவினர் சரசாலையில் இடம்பெறும் கண்ணி வெடி அகற்றும் பணியை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தூதுவர் எரிக்சோல் பாலாவுடன் சந்திப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன்பாலசிங்கத்தை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் நேற்று லண்டனில் சந்தித்து பேச்சுநடத்தியுள்ளனர்

அடுத்தமாதம் தாய்லாந்தில் ஆரம்பமாகவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை சம்பந்தமாக இறுதிமுடிவுகளை எடுக்கும் நோக்கிலேயே இச் சந்திப்பு இடம்பெற்றது

பேச்சுக்களுக்கான நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப்பட்டமை சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவுள்ள திகதி புலிகள்மீதான தடைநீக்க விடயம் புலிகளின் தரப்பில் முதற்கட்டப் பேச்சுவார்த்

( 6ம் பக்கம் பார்க்க)

அன்பு வாசகர்களே!
வலம்புரியுடன் வாரமலர்
**சங்குநாதத்தையும்**
கேட்டுவாங்குங்கள்.
விலை ரூபா
**14.00**

னத்தை ஏற்படுத்தவென்று குறிப்பிடப்படுகிறது. இது ஒரு பெரிய பகிடி என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்க பிரதி அமைச்சர் ரிச்சர் ஆமிடேஜின் இலங்கை விஜயம் குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே வீரவன்ச இதனை நளினமாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்கா நாடுகளுக்குள் நுழைவது சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக என்றால். இன்று பாலஸ்தீனத்தில் சமாதானம் ஏற்பட்டு

ஆனால் இன்றுபாலஸ்தின மக்கள் துன்பப்பட்டுக்கொண்டே இருக்கின்றார்கள் அவர்களுக்கு இதுவரை உரிமைஎதுவும் கிடைக்கவேஇல்லை அத்துடன் தமதுநிலப்பரப்பையும் அவர்கள் இழந்துவிட்டார்கள்.

அமைச்சர் மிலிந்த மொறகொட நாட்டின் சகல துறைகளையும் தனியார் மயப்படுத்தலுக்கு உட்படுத்தி வருகிறார். அவரின் திட்டமில்லாத நடவடிக்கைகள் நாட்டுக்கு மோசமாக பாதிப்பை ஏற்படுத்தப் போகின்றன. இறுதியில் இவர் இலங்கையையே வெளிநாடுகளுக்கு விற்றுவிடுவார் என்றும் வீரவன்ச கூறினார். (இ)

# அமெ. இராஜாங்க பிரதிஅமைச்சர் பலாலியில் இரகசியமாநாடு

## படை உயரதிகாரிகள் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்த அமெரிக்க இராஜாங்கப் பிரதிஅமைச்சர் ரிச்சாட் ஆமிடேக் நேற்று பலாலி படைத்தளத்தில் படை உயரதிகாரிகளுடன் இரகசிய கலந்துரையாடலில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது

இக்கலந்துரையாடலில் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்தமொறகொட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர்

(6ம் பக்கம் பார்கக)

## கியூடெக் ஏற்பாட்டில் உரிமையுள்ள சிறுவர் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

கியூடெக் சமாதானக் குழுவின் ஏற்பாட்டில், திருநகர் பெஸ்கி கிராம சிறுவர்கள் உள்ளடங்கிய ஏனைய பகுதிச் சிறுவர்களுக்கான ''உரிமையுள்ளசிறுவர்'' எனும் தலைப்பிலான முழுநாள் பயிற்சிப் பட்டறை இன்று காலை 9 மணிக்கு யாழ். மறை மாவட்ட மறைக் கல்வி நடு நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

சிறுவர்கள் தம் உரிமைகள் பற்றி அறிந்திருப்பதை நோக்கமாகக் கொண்டு இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.(உ-6)

## சிறு விளம்பரம்


### போட்டி வினாத்தாள்

உ.த.ப. இயக்க பொது அறிவுப் போட்டி2002வினாத் தாள எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம். ரூபா20/- செ. பரமநாதன் ''பரமநாதன் இல்லம்'' மானிப்பாய் வீதி, தாவடி கொக்குவில். (5838)

### கட்டடப்படவரைஞர் தேவை

கட்டடப் படங்கள் கீறக் கூடியவர்கள் அல்லதுதொழில் நுட்பக் கல்லூரியில் பயிற்சி முடித்தவர்கள விண்ணப்பிக்கவும். விண்ணப்பிக்கவேண்டிய முகவரி: விளம்பர இல. 305மே/பா. வலம்புரி யாழ்ப்பாணம். (5845)


## மிதிவெடியில் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் நேற்றுமாலை இடம் பெற்ற மிதிவெடிச் சம்பவம் ஒன்றில் வயோதிபர் ஒருவர் தனது காலை இழந்துள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை வினாசித்தம்பி (வயது 71) என்பவரே காலை இழந்தவராவார். அவர் தற்போது யாழ் போதனா வவத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மேற்படி பகுதியில் மிதிவெடி அகற்றும பிரிவினரால் மிதிவெடிகள் அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-02)

## இராசி பலன்

ஆவணி 7வெள்ளி
பிரதமை 5.37
அவிட்டம் காலை6.43
நல்லநேரம்6 05-7·35
இராகுகாலம் 10.35-12.05

**மேடம்**
பிதாசிந்தை, பணவிரயம் மனககுழப்பம், கர்வம்உண்டாதல்

**இடபம்**
பொருள்வரவு, மனமகிழ்ச்சி நண்பர்களசந்திப்பு, தொழில் சிந்தை

**மிதுனம்**
கடினஉழைப்பு, உற்சாகம், தொழிலவெறறி, சுபநிகழ்வு

**கடகம்**
திட்டமிடல், வீண்பயம் உடல்உழைப்பு, தெய்வசிந்தை

**சிங்கம்**
நல்லஉணவு கிடைத்தல், வீண்தொல்லை, எதிர்ப்பு உடல்அசதி

**கன்னி**
திடீர்ப்பயணம், பணவரவு கௌரவம் உண்டாதல், அபூர்வசந்திப்பு

**துலாம்**
பகைவர்விலகுவர், நோய் குணமடைதல், பணவரவு திடீர்ப்பயணம்

**விருச்சிகம்**
தாழ்வுநிலை, வியாபார மேன்மை, மனக்கஷ்டம்

**தனுசு**
கலவிமேன்மை, ரோகபயம், மனப்பயம், அவநமபிக்கை

**மகரம்**
புதிய பொருள்சேர்க்கை அந்நியர்சந்திப்பு, கூட்டு முயற்சி, வாக்குமேன்மை

**கும்பம்**
மாதர்நட்பு, காரியத்தடை, பணவிரயம், கௌரவக் குறைவு

**மீனம்**
ஆழ்ந்தசிந்தை, பெரியோர் ஆசி, நண்பர்உதவி, நல்ல முயற்சி

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வள்ளுவன்

---

### ஆலயச்சூழலில் பண்பாடு பேணுவது தலையாய கடமை

# நல்லொழுங்குகளுக்கு சீரழிவு ஏற்படுத்துவோர்

# இனத்துரோகிகளாகக் கணிக்கப்படுவர்

'பொறுப்புணர்ந்து செயற்படுவோம் எம் பெருமைகளைக் காக்கும் எல்லாப் பக்குவங்களையும் கடைப்பிடிப்போம்'! எனும்தலைப்பில் எம்மினிய தமிழ் பேசும் உறவுகளே! என்று விழித்து! தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பு:

நீண்ட காலப்பாரம்பரிய பெருமைகளோடும் சிறப்புகளோடும் வாழ்ந்து வரும் ஒரு மக்கள் சமூகம் தமது சிறப்புகள் அனைத்தையும் வெளிப்படுத்திக் கொள்கிற இடங்களில் மிக முக்கியமானவை பெருவிழாக்களும், திருவிழாக்களும்நடைபெறும்இடங்களே அந்த வகையில் எம்மண்ணில் நடைபெறும் ஒவ்வொருபெருவிழாக்களும், திருவிழாக்களும் எமது பெருமைகளை நிலைநாட்ட உதவுகின்றவைகளாக அமைய வேண்டும்.

அன்பானவர்களே!

வரலாற்றுப் புகழ் மிக்கதும் நீண்டகாலப் பெருமைகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டதுமான நல்லூர் கந்தசாமி ஆலயத்திருவிழா நடைபெற்றுக்கொண்டிருக்கும் இக்கால சூழலிலே ஆலயசுற்றாடலில் எமது பண்பாடு காத்து ஒழுக்கவிழுமியங்களைப் பேணிக் கொள்வது எமது தலையாய கடமையாகும்.

வெளிநாட்டவர் வருகை

நல்லூர்க் கந்தனின் திருவிழாககாலங்களில் எமதுமண்ணின் நாலாபுறங்களிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் வந்துபுடைசூழுவர். நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழாக்களையும், புடைசூழும்மக்களையும் காண வெளிநாடுகளிலிருந்தும் அதிக எண்ணிக்கையானோர் வந்த வண்ணமும் வருகை தரவும் உள்ளனர்.

இன்றைய காலசட்டத்தில் இத்தீவில் முன்னெடுக்கப்படும் சமாதான முன் முயற்சிகள் காரணமாக இத்தகைய வருகைகள் சாத்தியமாகின்றன. அதுமட்டுமல்ல தென்னிலங்கை வாழ் மக்களும் இத்தீவின் ஏனைய இடங்களில் வாழ் மக்களும் இங்கு வந்து திரண்ட வண்ணமுள்ளனர், இன்னுமின்னும் திரளவும் போகின்றனர்.

இவ்வாறான நிலமைகளின்போது இடம்பெறக்கூடிய ஒரு சிறு அசம்பாவிதம் கூடஉன்னதமான மகிழ்வானமனப்பாங்கையும் திருவிழாக்களில்வந்து சூழும் மக்களின்மனமொப்பிய பகதிப்பரவசத்தையும் சிதைப்பதோடு, எமது பெருமைமிக்க பண்பாட்டு ஒழுக்காற்றலின் கீர்த்திக்கும் உலைவைக்கக் கூடும்;

உறவுகளின் வேணவா

அர்த்த மற்றதாகும்

ஆனந்த மனோநிலையுடன் நல்லூர் ஆலயத்திருவிழாக்களிலே பல்லினப் பெண்களும் கலந்துகொள்ளக்கூடியவாய்ப்புக்களைக் கொண்டிருக்கும் இவ்வேளையிலே பெண்களின் மீதான பாலியல் வக்கிரத்தை வெளிப்படுத்தும் துன்புறுத்தல்களோகுழு மோதல்களோ மேற்கொள்ளப்பட்டால், அவை மிக மோசமாக எம்மினத்தின் பெருமைகளையும் புகழையும் பாதிப்பதோடு, இடருக்குள்ளாகுவோரின் மனங்களையும்கிலேசப்படுத்தி விடும் என்பதோடும் மட்டுமல்ல, மாபெரும் ஈகங்களை ஆற்றிய எம் உறவுகளின் வேணவாக்களையும் அர்த்த மற்றதாக்கிவிடும்.

இப்படியான பண்பாட்டு மாசுறல்களையும் விழுமியச் சிதைப்புகளையும் நல்லொழுங்குகளிற்குசீரழிவுகளையும் ஏற்படுத்த முனைபவர் எவராயினும் அவர்கள் தாய் மண்ணுக்கும் தாய்மொழிக்கும், பண்பாட்டிற்கும், இனப் பெருமைக்கும்துரோகம் செய்பவர்களாகவே கருதப்படுவார்கள்.

இம் மாதிரியான பெருவிழாக்களில் கலந்து கொண்டும மக்களுக்குப்பல விதமான சிரமங்கள், கஷ்டங்கள், இடையூறுகள் ஏற்படுவது இயல்பு. அவ்வாறான வேளைகளில் அம்மக்களுக்கு மனமுவந்து உதவுவதே மனிதப் பண்பின சிறப்புயர்வாகும். இது தவிர்ந்து, அம்மக்களுக்கு மேலதிக கஷ்டங்களையும், சிரமங்களையும், இடையூறுகளையும்கொடுப்பவர்களாக, மக்களின் நகை, பணத்தைத் திருடுபவர்களாக செயற்படுவது மனித மாண்பினைக் குழி தோண்டிப் புதைக்கும் மிகப் பெரிய கேவலமாகும் இழிவாகும்.

அன்புடன் கேட்கிறோம்.

மனிதப் பண்பின் மேன்மைகளையும் எம்மினத்தின் விழுமியங்களையும் காக்கும் வண்ணம் நடந்து கொள்ளும்படி அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். திருவிழாவைக் காணக்கூடும் மக்களை வழி நடத்தி ஒழுங்குகளை நிறைவேற்றவும், அசம்பாவிதங்கள் எதுவும் நிகழாமல் பார்த்துக் கொள்ளவுமென நியமிக்கப்பட்ட தொண்டர்கள் ஆங்காங்கு செயற்பட்டுக் கொண்டிருப்பார்கள்.

அவர்களுக்குரிய மதிப்புக் கொடுத்து, அவர்கள் கேட்டுக் கொள்கிறபடி, வழிகாட்டுகிறபடி செயல்பட்டு, நல்லியல்புகள் காப்பாற்றப்பட உதவுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

எமது மேன்மைகளைப் பேணும் வகையில் திருவிழாக்களில கலந்து கொள்ளும் எண்ணிறந்த மக்கள் வெள்ளத்தில் மிகச்சிலர் மட்டும், அசம்பாவிதங்களை விளைவிக்கும் சின்னத் தனங்களுடனும், கயமைத்தனங்களுடனும் செயற்படுவதா?

நல்லியல்பை கெடுக்க வேண்டாம்

இந்த மிகச் சிலரின் நடவடிக்கைகள் கூட நாம் அனைவரும் கட்டிக் காக்க விளையும் எமது பண்பாட்டு மேன்மைகளைச் சிதைத்து விடும். ஆதலால் நாம் மீணடும் கேட்கிறோம் நல்லியல்புகளைக் கெடுக்கும் எந்தவொரு செயலிலும் எவரையும் ஈடுபட வேண்டாம்.

இதையும் மீறி வேண்டத்தகாத மேற்படி செயல்களில் ஈடுபடுவோர், எம்மால் கண்காணிக்கப்படுவார்களென்பதுடன், அவர்கள் மீது வேண்டிய நேரத்தில் உரிய நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய கட்டாயமும் எமக்கானதாகிவிடும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ''மேன்மையுடன் திகழும் பண்பினைத்-தொடர்வோம்! விழுமியங்களைப் போற்றும் சிறப்பினை காப்போம்.

---

வலயக் கல்வி அலுவலகங்களுக்கு

## நவீன தொழில் நுட்ப கட்டமைப்பு வசதி

(கொழும்பு)

வடக்கு-கிழக்குமாகாணத்திலுள்ள வலயக்கல்வி அலுவலகங்களின் திட்டமிடல் பிரிவுகளுக்கு நவீன தொழில் நுட்ப தொலைத்தொடர்பும் கட்டமைப்பு வசதிகள் வழங்குவதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்திற்கான நிதி வசதிகளை, உலகவங்கியின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் தேசிய நிதி ஆணைக்குழு வழங்கவுள்ளது. உ-3)

பட்டினிக்கெதிரான நிறுவனத்தால்

## புளியங்கூடலில் பயன்மிகு திட்டங்கள்

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் கிராமசேவையாளர் பிரிவில் பட்டினிக்கெதிரான நிறுவனம் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்த அடிப்படையில், மீளக் குடியமர்ந்துள்ள குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களுக்கு மலசல கூடங்களை அமைத்தல், மலசல கூடங்களைப் புனரமைத்தல், விவசாயக் கிணறுகள் புனரமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

(உ-75)

## வீட்டுத் தோட்டம் ஊக்குவிப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனத்துடன் இணைந்து யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் வீட்டுத்தோட்ட ஊக்குவிப்புத் திட்டத்தை அமுல்படுத்தி வருகின்றது.

15 கிராமங்களில் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் மாசடைதலைத் தடுத்தல், நீரின் உபயோகம், நீர்பாசன விருத்தி ஆகியனவும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதேவேளை, இயற்கைப் பசளையின் முக்கியத்துவம் குறித்தும் மேற்படி கிராமங்களில் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. (உ-6)

## 'ஹெயர்' அதிகாரிகள் யாழ். வன்னி விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஹெயர்நிறுவத்தினால்செயற்படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாக ஆராயும் வகையிலும், மக்களின் தேவைகளைக் கண்டறியும் வகையிலும் மேற்படி நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஸ்கொட் பையயா, மற்றும் திட்டப் பணிப்பாளர் கிறிஸ்ரியன் பாபறோ ஆகியோர் எதிர் வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம்வருகை தரவுள்ளனர்.

அன்றையதினம் யாழ்ப்பாணத்திலும், அடுத்தநாள் வன்னியிலும் தமது பயண நோக்கச் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளனர். (உ-6)

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களில்

## மகளிர் குழுக்கள் சுற்றுலா

(கொழும்பு)

சாவல் கட்டுப்பகுதியில் உள்ள துணை இழந்த மகளிர் குழுக்களான தாரகா, தாரகை, தாரணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் 60 பேர் சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மணற்காடு மற்றும் வடமராட்சிப் பிரதேசங்களுக்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சுற்றுலா செல்லவுள்ளனர். (உ-6)

## நுளம்புகள் பெருக இடமளிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

டெங்கு நுளம்புகள் பெருக இடமளிப்போருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கைகளில் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அலிக் அலுவிஹார மேற்கொண்டு வருகிறார்.

சூழலைத் தூய்மையாகவைத்திருக்காதோர்க்கும், வீதிகளின் ஓரங்களில் குப்பை கூழங்களைக் குவிப்போர்க்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சு அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இதனை உடனடியாக அமுல்படுத்துமாறு நாடளாவிய ரீதியில் உள்ள உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாவட்டச் செயலகங்கள் பிரதேச செயலகங்கள் என்பனவற்றைக் கோரப்பட்டுள்ளது. (உ)

# இன்று ஒரு தகவல்

## கங்கை நீர் புனிதமானது

ஒருவர் வந்தார்;'சார்! நான் நிறைய பாவம் செய்து விட்டேன், அவற்றைத் தொலைக்கவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். என்ன பண்ணலாம் என்றார்'. காசிக்குப் போய்க் கங்கையில் தளித்து விட்டு வாருங்கள்என்றேன். 'நான் அந்த ஊரில் இருந்து தானே சார் வருகின்றேன்!எனக்குச்சொந்த ஊரே அதுதானே' என்றார்.இவரை எந்த ஊருக்கு அனுப்புவது? கங்கை புனிதமானது என்று ஆன்மீகவாதிகள் சொல்கிறார்கள்.அதையேதான் இப்போது விஞ்ஞானிகளும் சொல்கிறார்கள, 'கங்கா தீர்த்தம் கொண்டுவந்திருக்கிறேன். அது எவ்வளவு காலமானாலும் கெட்டுப் போகாது என்றுசொல்லுவார்கள்சார்'! அது உண்மைதான் அதற்கு என்னகாரணம் என்று நினைக்கிறீர்கள்? கங்கைநதி நீர் இருக்கிறதே...அது மற்றநதி நீர் மாதிரிஇல்லை. அதற்குச் சில விசேஷ குணங்கள் இருக்கின்றன:

கங்கை நீர் ஒரு சிறந்த கிருமிநாசினி.அது எப்படித் தெரியும் என்று கேட்கிறீர்களா?புதுடில்லியில் மலேரியா ஆராய்ச்சி மையம் ஒன்று இருக்கிறது.அதில் இருக்கிற விஞ்ஞானிகள் மலேரியா காய்ச்சல் சம்பந்தமாக சில ஆராய்ச்சிகள் செய்கிறார்கள்.அவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? மலேரியாக்கிருமிகளைப் பரப்பக்கூடிய கொசுக்கள் எந்தவிதமான தண்ணீரிலுமம வசிக்குமாம்.ஆனால் கங்கை நதி நீரில் மட்டும் அவற்றால் வளரமுடியாதாம், டில்லிக்குப் பக்கத்தில்...கங்கை நதி ஓரமாக உள்ள சில கிராமங்கள்.. யமுனைநதி ஓரமாக உள்ள சில கிராமங்கள்..: ஆகியவற்றில் ஒரு சர்வே நடத்தினார்களாம்.

அந்தக் கிராமங்களின் மேனிலை நீர்த்தொட்டிகளில் இருக்கிற தண்ணீரைச் சோதித்துப் பார்த்திருக்கிறார்கள்.கங்கை நதிநீர் இருந்த தொட்டிகளில் மலேரியாக் கொசுக்கள் அறவே இல்லை. யமுனைநதி நீர் இருந்த தொட்டிகளில் அவை அதிகமாக இருந்தனவாம். டில்லியில் மயூர்விகார் காலனி என்று ஒருபகுதி, அங்கு கங்கை-யமுனை இரண்டு நதி நீரும் கலந்த தண்ணீர் விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்களாம். அங்கேயுள்ள தொட்டிகளில் அந்தக் கொசு அறவே வளர்வதில்லையாம். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் கங்கை நீர் எந்த நீரோடுகலந்தாலும் அதில் மலேரியாக்கொசு வளர்வதில்லைஎன்று தெரிகிறது மலேரியாக் கிருமி மட்டுமில்லை. எந்தக்கிருமியுமே அதில் இருக்காதுபோல இருக்கிறது.

பிரஞ்சுநாட்டு மருத்துவவல்லுநர் ஒருவர், டாக்டர் டி.ஹெரில்லி என்று பெயர் அவர்சில ஆராய்ச்சிகள் செய்தார். அவர் என்ன சொல்கிறாரென்றால்...காலரா,சீதபேதி போன்றநோய்களினால் இறந்துபோனவர்களின் பிணங்கள் கங்கையில்மிதந்து வருவதைப் பார்த்திருக்கிறேன். சாதாரண தண்ணீரில் அப்படிவந்தால்.. சுற்றியுள்ள தண்ணீரில் அந்தக் கிருமிகள் ஏராளமாகஇருக்கும். ஆனால் கங்கையில் பிணத்தைச்சுற்றியுள்ள தண்ணீர்கூட சுத்தமாக இருக்கிறது. ஒரு கிருமியைக்கூடப் பார்க்கமுடியவில்லை. அது எனக்குப்புரியாத புதிராக இருக்கிறது என்கிறார்.

கனடாநாட்டில் மெக்கில் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த டாக்டர் எஃப்.சி. ஹாரிசன் அவரும் கங்கை நீர்பற்றி ஆராய்ச்சி பண்ணினார். அவர் 'எந்தவிதமான கிருமியையும் கங்கைநதிநீரில்போட்டால் மூன்று அல்லது நாலு மணிநேரத்தில் அவை செத்துப்போய் விடுகின்றன' என்கிறார். 19 ஆம் நூற்றாண்டில் அடிக்கடி வெள்ளைக்காரர்கள் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு கப்பலில்வந்து போவதுவழக்கம். அந்தக் காலத்தைச்சேர்ந்த பிரிட்டிஷ் டாக்டர் சி. இ. நெல்சன் என்பவர் என்ன எழுதியிருக்கிறார் தெரியுமா?

கல்கத்தாவிலிருந்து இங்கிலாந்துக்குப் புறப்படுகிறபொழுது நாங்கள் ஹுக்ளி நதிநீரை (மேற்குவங்கத்தில் கங்கைக்கு ஹுக்ளி என்று பெயர்) எடுத்துக்கொண்டு போவோம். இங்கிலாந்து போய்ச் சேர்கிறவரையும் அது கெடாமலிருக்கும். ஆனால் திரும்பி வருகிறபொழுது இங்கிலாந்திலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு வருவோம் அது பாதிவழியிலேயே கெட்டுப்போய்விடும். நடுவழியில் எகிப்திலுள்ள துறைமுகத்தில் புதிதாக தண்ணீர் எடுத்துக்கொண்டு வருவோம் என்று எழுதியிருக்கிறார். அவை யிருக்கட்டும் கங்கைநதி நீர் இப்படிக் கிருமிநாசினியாக இருப்பதற்கு என்ன காரணமாக இருக்கும்.

இமய மலையில் இருக்கிற மூலிகைகள் இதற்குக் காரணம் என்று இந்திய மருத்துவத்துறை வல்லுநர்கள் சொல்கிறார்கள். கங்கை நீரில் கதிரியக்க கனிமங்கள் (Radio-active Minerals) இருக்கின்றன.

அதனால் தான் கிருமிகள் அழிந்து விடுகின்றன. என்கிறார்கள் நவீன விஞ்ஞானிகள். வெள்ளி, செம்பு, நிக்கல், இரும்பு, குரோமியம், போன்ற கனரக உலோக தாதுக்கள் கங்கை நீரில் கரைந்திருக்கின்றன. கிரிமிகளை அழிக்கக் கூடிய சக்தி அவற்றிற்கு உண்டு. இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

எப்படியிருந்தாலும் கங்கை நீர் ஒரு சிறந்த கிருமிநாசினி என்பதில் சந்தேகமில்லை. அதனால்தான் கங்கையில் குளித்தால் எல்லாம் தொலையும் என்று சொல்வது. அங்கு போய் விட்டு வந்தால் எதையாவது விட்டுவிட்டுவரவேண்டும் என்று சொல்வது வழக்கம்.

ஒருவர் இங்கே இருந்து காசிக்கு ரயிலில் போனாராம். அங்கேயிருந்து திரும்பிக் கால் நடையாக இங்கு வந்து சேர்ந்தார். ஏன் சார்! அப்படி என்று கேட்டிருக்கிறார். ''காசிக்குப் போனால் எதையாவது விட்டு விட்டுவரவேண்டும் என்று சொல்லி அனுப்பினார்கள் நான் அங்கே போனதும் என் மணிபர்சை விட்டுவிட்டேன். யாரோ அடித்துக்கொண்டு போய்விட்டான். அதனாலேதான் இப்படி நடந்து வருகிறமாதிரி ஆகிவிட்டது'' என்றாராம்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நிபந்தனைகளின் அடிப்படையிலேயே புலிகள் கடல் பயணம் செய்கின்றனர்

## பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான கடல் போக்குவரத்து அனுமதி நிபந்தனைகளின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்தல் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்;

புலிகள் கடல் போக்குவரத்துக்கு காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தவிரவும் தற்பாதுகாப்புக்காக கொண்டு செல்லப்படும் ஆயுத விபரங்களையும், பயணிக்கும் உறுப்பினர்களின் விபரங்களையும் கடற்படைக்கு அறிவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச உரையாற்றுகையில்;

கடற்படையினர் பயன்படுத்தும் கடல் பகுதியே விடுதலைப் புலிகளின் கடல் போக்குவரத்துக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை அமைச்சர் மிலிந்த மொறகொட சந்திப்பதற்கான நிபந்தனையாகவே கடல் போக்குவரத்து அனுமதி வழங்கப்பட்டது.

இந்த நிலைமை மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டார். (உ-10)

## கலந்துரையாடல்

(அராலி)

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திணைக்களங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று மு.ப. 10.00மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (உ-214)

## தெய்வீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தில் வடபிரதேச இந்துப்பேரவை 63 நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்திவரும் தெய்வீக நிகழ்ச்சிகளில் இன்று 'குரு வாய் வருவாய்' என்ற பொருளில் சிவத்தமிழ் வித்தகர்சிவ மகாலிங்கம் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ-3)

## தெய்வீக இசையரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர்மன்றம்நடத்தும நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டிய தெய்வீக இசையரங்கில், பதினோராம் நாளான இன்று எஸ் அகிலனின் பாட்டுக்கச்சேரி பக்க வாத்தியங்கள் சகிதம் நடைபெறவுள்ளது. (உ-3)

## ஆய்வு கூடப் பரிசோதனைகள் மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குளியிலுள்ள யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஆய்வுகூடப் பரிசோதனைகள் மீளவும் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இச் சேவை தினமும் பி.ப. 1.00 மணி முதல் 3 00 மணி வரையும் இடம்பெறும்.

மலேரியாவுக்கான குருதி மற்றும் சலப்பரிசோதனைகள் இங்கு இலவசமாக இடம்பெறவுள்ளன. (உ)

## சிறுவர்கள் சீர்திருத்தப் பள்ளியில்

(உடுவில்)

கோயில் உண்டியலை உடைத்து அதில் இருந்த பணத்தைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சிறுவர்கள் இருவரை யாழ். நீதிமன்றத்தில் கடந்த செவ்வாயன்று ஆஜர்ப்படுத்தப்பட்டபோது, அவர்கள் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதன் பேரில் இருபாலை கானான் சீர்திருத்தப்பள்ளிக்குஅனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அரியாலை மாம்பழம் சந்தியில் உள்ள கோயில் ஒன்றின் உண்டியலை உடைத்து 10 ஆயிரம் ரூபா திருடியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (உ-261)

## பாக்.வர்த்தகர் குழு இலங்கை வருகை

(கொழும்பு)

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும்இடையில்மேற்கொள்ளப்படவுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்த ஆரம்ப பேச்சுவார்த்தைகளை நடத்த பாகிஸ்தான் வர்த்தகர் குழு ஒன்று அடுத்த மாதம் நடுப்பகுதியில் இலங்கை வரவுள்ளது.

ஒப்பந்தம் தொடர்பான ஆரம்ப விடயங்கள் இத்தருணத்தில்ஆராயப்படவுள்ளன. (உ-3)

## யாழ். பஸ் நிலையப் பகுதி மலசல கூடத்தினை மக்கள் பாவிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 1995 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது சேதம் அடைந்தயாழ். பஸ்நிலையம் அருகிலுள்ளமலசல கூடம் தற்போது புனரமைக்கப்பட்டு கடந்த 10 ஆம் திகதிமுதல்பொதுமக்கள்பாவனைக்கெனத் திறந்து விடப்பட்டுள்ளது.

யாழ். பஸ் நிலையத்தின் வடக்குப்பகுதியின் சி. பொன்னம்பலம் வீதியில் இம் மலசல கூடம் அமைந்துள்ளது. முன்னர் கட்டணத்துடன் பாவனைக்கு அனுமதி வழங்கப்பட்ட போதும் தற்போது எவ்வித கட்டணமும்இன்றிபொது மக்கள் இதனைப்பயன்படுத்தலாம் என யாழ். மாநகர ஆணையாளர் இ. இராமலிங்கம் அறிவித்துள்ளார்; (உ)

## சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் வினைத்திறன் தடை காண் பரீட்சை முடிவுகள்

(ஏழாலை)

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தால் நடத்தப்பட்டவினைத்திறன், தடை காண் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. இப் பரீட்சைக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் இருந்து 49 பேர் தோற்றிய போதிலும் 18 பேர் சித்தியடைந்துள்ளனர். அவர்களின் பெயர்கள் வருமாறு:-

கி.பிரபாகரன், கி.சிவாஜினி, தி.சசிகுமார், ச.குகதாசன், ந. உதயதரன், ஐ.ஹயமுகி, க.சபேசன், க.கஜேந்திரபிரபன், க.தங்கவடிவேல், செல்வி மு. ஜெயந்தி, திருமதி. அ.றஞ்சினி, கு.பிரிதினி, க.சத்தியதரன்,சா.சுகன்ஜா,அ.சந்திரகலா, திருமதி.வெ.வனிதா, தே. விக்னேஸ்வரன், த.திபிசாந்தி, (உ-12)

## மின்சாரம் வழங்குமாறு வலியுறுத்து

(சுதுமலை)

நவாலி அட்டகிரி குதனை வீதிப் பகுதிக்கு மின்சாரம் வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அப்பகுதி மக்கள் கையொப்பமிட்டு மகஜர் ஒன்றினை வலி தென் மேற்கு பிரதேச சபைத் தலைவர் அன்ரன் ஜோன்சனிடம் கையளித்துள்ளனர். (உ-252)

## பக்தர்களுடன் வரும் நாய்களால் நல்லூர் ஆலயத்தில் தொல்லை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயச்சூழலில் நாய்களால் ஏற்படும் கேடுகள் குறித்தும், அவற்றைக்கட்டுப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தியும் யாழ். மாநகர சபை ஆணையாளர் இ. இராமலிங்கம் பத்திரிகைக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அக்குறிப்பில்;

நல்லூர் முருகன் உற்சவத்திற்குவரும் பக்தர்களுடன் வளர்ப்பு நாய்களும்கூடவே வந்து ஆலய வீதிகளை மாசுபடுத்துவதுடன், அங்கப் பிரதிட்டை செய்யும் அடியார்களைக்கடித்தும் ஏனைய அடியார்களுக்குப் பல அசௌகரியங்களையும் உண்டாக்குகின்றன.

எனவே, ஆலயத்திற்குச் செல்வதற்குமுன்னர் உங்கள் நாய்களைக் கட்டிவிடவும். அத்துடன், நல்லூர் ஆலயச் சுற்றாடலில் வசிக்கும் நாய் வளர்ப்போர் நாய்களை வீதிக்கு விடாது கட்டிவளர்க்கும்படி வேண்டப்படுகின்றீர்கள் என்றுள்ளது. (உ)

## நல்லூரான் திருவடிக்கு-11



### கொல்லும் வினை நீக்கும் வேலா

பிரமனைச் சிறை செய்து பரமனுக்குக் குருவான
குமரா
தமிழோடு விளையாடி ஔவைக்கு அருள் செய்த
முருகா
வேல் கொண்டு வினை தீர்த்து சூரனைஆட் கொண்ட
பாலா
அண்ணனின் அருளோடு வள்ளியை மணம்
கொண்ட வேலா

குன்று தோறாடி குவலயம் காக்கின்ற குமரேசா
நல்லூர் பதியமர்ந்து நமக்கருள் புரிகின்ற கந்தா
தீவினை போகுமென நாமுனைச் சூழ வந்தோம்
எமைக் கொல்லும் வினைநீக்கும் நல்லூர் கதிர்வேலா

கே. வி. குணசேகரம்

### பண்போடெமைக் காப்பாய்

நதியோடு உறவாடி நன்மலர் மணங்கூடி
நறுமணம் தருந்தென்றல்- நம்மை
நெருடிய காலமெங்கே?-இன்று
விதியோடு விளையாடி வீதியோரம் உண்டுறங்கி
வதிவிட வரமுமற்றோம் -தினம்
வயிறெரிந்து வாடுகின்றோம்- நாங்கள்
பதியாக உனைவைத்துப் பாட்டாலே பாடிநிற்க
பாரிலெமை வாழவைப்பாய் – நல்லூரா
பண்போடு காத்தருள்வாய்!

நீர்வைக் கலைவரன்

### மானிடம் எழுந்து நிமிர்ந்திட

திரண்ட தோளும் திருக்கரம் மீதினில் பெருவேலும்
நீண்ட தோகையை உடைஉயர் வண்ண மயிலேறி
கூர்ந்த விழியுடை இருதிற மாதர்கள் இணைந்தேக
வேண்டும் அடியவர்கட் கருள்திறம் புரிந்திடும்
பெருமானே
மூண்டு வரும்பகை சூரனின் கொடுவலி அழிந்தோய
துணிந்து திறமுடன் எழுந்தநற் சேவற்
கொடியோனே
தெளிந்த ஞானமும் சிறந்ததீரமும் கொண்டெங்கும்
விழுந்த மானிடம் எழுந்து நிமிர்ந்திட வருவாயே
நினைத்த காரியம் நின்மதியாய்ப்பெற தினந்தோறும்
'சரவணபவனென' அழைத்தபோதினில்
உடனெமக்கருகினில்-வருவாயே
எஸ். துரைமகள்

### நலம் ஓங்கிடச் செய்!

காலம் தவறாது கந்தன் புகழ் பாடி
ஞாலத்தில் வாழ்ந்திருப்போம்நாளும் -ஈழத்தின்
கோலம் சிதையாமல் வளங்கள் பெருக்கியே
சீலம் ஓங்கிட்ச் செய்

சுகதாசசர்மா சிவகுமார்

### வேல் வலம் வந்ததம்மா

கல்லும் உரு கும்படி கையெடுத்து நின்றுதமிழ்ச்
சொல்லாலுனை வேண்டி சுந்தரக் கவிபாடி
நல்லூரின் நாயகனால் நம்மண்ணில் சூழுகின்ற
பொல்லா வினை நீக்கும் வேல்தானே
வந்ததம்மா!

வித்தாகி எங்கள் தமிழ்ச் சொத்தாகி நின்றவனே
நித்தம் ஒரு வடிவெடுத்து நீ பவனி வருகையிலே
சித்தம் குளிருதையா சீரெல்லாம் பெருகுதையா
கத்தும் கடல் குடாநாட்டை காக்கவேல் வந்ததம்மா!

செ. பவானி

### வேலேந்தி வருவாய்!

அலங்காரக் கந்தாவுன் திருக்கோயில் வந்தால்
அருளன்றி வேறொன்றும் இல்லை
நலங்கூட்டும் நல்லூர் முருகாவுன் னுருவை
நாடினால் ஓடுமோ தொல்லை
பலங்காட்டும் வேலும் பச்சைமா மயிலும்
பரிவோடு உன்நாமம் கூறும்
விலங்காக வாழும் இனங்காக்க முருகா
விரைந்துநீ வேலேந்தி வருவாய்!

இராகுலன்

# ஐ. தே. மு. ஆட்சி பீடமேறியது மக்களை அச்சுறுத்துவதற்காகவா?

## சபையில் எதிர்க்கட்சித்தலைவர் வினா

(கொழும்பு)
மக்களை அச்சுறுத்துவதற்காகவா ஐக்கிய தேசிய முன்னணியிடம் ஆட்சி அதிகாரம் கையளிக்கப்பட்டது

இவ்வாறு அமைச்சர்ஜோன் அமரதுங்கா மீதான நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் எதிர்கட்சித்தலைவர்மகிந்தராஜபக்ஷ கேள்வியெழுப்பினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், தவறுகளைத் திருத்திக் கொள்வதாகக் கூறி ஆட்சிப் பீடமேறியுள்ள ஐக்கிய தேசிய முன்னணியினர் எதிர்க்கட்சிக்கு சார்பாக வாக்களித்த மக்களை துன்புறுத்தி வருவதாகவும் குற்றம் சாட்டியதுடன்,

பாதுகாப்புத் துறையைஅரசியல் மயப்படுத்தல்தவிர்க்கப்படல்வேண்டுமெனவும்எதிர்க்கட்சியினர் சுதந்திரமாக தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தவறும் பட்சத்தில் பாரிய விளைவுகளைசந்திக்க நேரிடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார். (உ-10)

## பாராளுமன்ற கைகலப்புச் சம்பவம், ஒளிப்பதிவு செய்யப்பட்டமை குறித்து விசாரணை நடத்த கோரிக்கை

(கொழும்பு)
கடந்த மாதம் 24 ஆம் திகதி ஆளும் கட்சிஉறுப்பினர்களுக்கும். பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களுக்கும் இடையில்சபையில் இடம்பெற்ற கைகலப்புச் சம்பவத்தின் ஒரு பகுதி தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது குறித்து விசாரணை நடத்துமாறு பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டிசில்வா சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பியஅவர், சபை அமர்வுகளை புகைப்படம் எடுக்கவோ, படப்பதிவு செய்யவோ அனுமதியற்ற நிலையில் தனியார் தொலைக்காட்சியில் இக் கைகலப்பு ஒளிபரப்புச் செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் பாதுகாப்பை கேள்விக் குறியாக்கும் இச் சம்பவம் குறித்து உரிய விசாரணை நடத்துமாறும் நிமால் சிறிபால டிசில்வா மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

## சோதனைக் கெடுபிடிகளைக் கண்டித்து அல்லைப்பிட்டிச் சாவடி முன்பாக திங்களன்று மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)
பயணிகள் மீதான கெடுபிடிகளை கண்டித்து, அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்முகமாக எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அல்லைப்பிட்டிசோதனைச் சாவடி முன்பாக வீதி மறிப்புப் போராட்டத்திலீடுபட்டு, எமது எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவிக்க உள்ளோம்.

கடற்படையினரின் அத்துமீறல்கள் குறித்து 'தீவுப்பகுதிப் பயணிகள்' சார்பில்இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின்வேலணையில் அமைந்துள்ள தீவுப்பகுதிக் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இவ்வாறுகுறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும்,

இலங்கை அரசுக்கும்- விடுதலைப்புலிகளுக்கும்இடையே கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் இராணுவரீதியான அழுத்தங்கள் குறைந்து, மக்களின் இயல்புவாழ்க்கைபுதுப் பொலிவுடன் உருவாகிவருவதைஅவதானிக்க முடிகின்றது.

ஆனால்,தீவுப்பகுதிநோக்கி வரும் பயணிகள் (அரச ஊழியர்கள், கோயிலுக்கு செல்வோர் மற்றும்சாதாரண மக்கள் மீது மீண்டும் அல்லைப்பிட்டி கடற்படையினர் தமது சோதனைக் கெடுபிடிகளை கடந்த சிலவாரங்களாக கட்டவிழ்த்து விட்டுள்ளார்கள்.

இதுபல இன்னல்கள் மத்தியில் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்குமேலும்மேலும் இன்னல்களையும் மனஉளைச்சலையும், காலதாமதத்தையும் உண்டு பண்ணுவதுடன் அரச நிறுவனங்களின் செயற்பாடுகளையும் மக்களின் இயல்பு வாழ்க்கையையும் பாதிப்படையச்செய்கின்றது.

மேற்படிபோராட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் தமது பூரண ஆதரவையும், ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம் மேலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மதித்தும், சட்டங்களுக்கு அப்பால் மனிதாபிமான முறையிலும் முறையானபயணிகள்போக்குவரத்துக்கு வழிசமைத்திட அனைத்துதரப்பினரையும்மிகவும் அன்புடனும், பணிவுடனும்கேட்டுக் கொள்ளுகின்றோம் என்றுள்ளது. (உ)

## பஸ் விபத்து ஒருவர் பலி

(பதுளை)
பண்டாரவளையிலிருந்து ஹெப்பிட்டிப்பொல நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று சப்பட்டா எனும் இடத்தில் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் 35 பேர் காயமடைந்துள்ளனர். (உ-10)

## இருதிருமணத்தை பதிவு செய்த நபருக்கு 5வருடச்சிறை

(உடுவில்)
இருதிருமண பதிவு மேற்கொண்ட நபருக்கு 5வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

கடந்த 19ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் குற்றவாளியாக காணப்பட்ட இளவாலையைச் சேர்ந்த நபருக்கே இச்சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

இதேவேளை, அண்மையில் இருதிருமண பதிவு மேற்கொண்ட இன்னொரு நபருக்கும் 5வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது
(உ 261)

## காணாமல் போனோர் பாதுகாவலர்சங்கம் சிவாஜிலிங்கம் எம்.பிக்கு நன்றி கலந்த பாராட்டு

(யாழ்ப்பாணம்)
குடாநாட்டில் கைதாகி காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்திற்கு நன்றியும்பாராட்டும் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் பிரதிநிதிகளை அண்மையில் கொழும்புக்கு அழைத்துச் சென்று தங்குமிட வசதிகள் மேற்கொண்டதுடன்,உறவுகளைத்தேடும் நடவடிக்கைக்கு பக்கபலமாக விளங்கியமை குறித்தே தமது நன்றியறிதலை வெளியிட்டுள்ளனர்.

பொறுப்பு வாய்ந்த பலர் எமது நிலையைக் கண்டும் காணாதது போல், ஏற்ற நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பின்னின்ற வேளையில், சிவாஜிலிங்கம் எம்.பி இயலாத நிலையிலும் தன்பணி உணர்ந்து நடந்து கொண்டதுடன்,

எம்முடன் கூடவே சகல சிறைச்சாலைகளுக்கும் வந்து இவற்றுக்கான பெருந்தொகைச் செலவையும் தனித்தே ஏற்றுள்ளார் என்று சங்கத்தின் செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமக்கு உதவியாகச் செயற்பட்ட நாடாளுமன்றஉறுப்பினர் என்.ரவிராஜ், பத்மநாதன் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இன்னிசைப் பேருரை

(யாழ்ப்பாணம்)
நல்லூர் உற்சவ காலத்தையொட்டி நல்லூர் சைவமகாசபை ஏற்பாட்டில் ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் மகாபாரத இசைப்பேருரை இன்று 'பீஷ்மர்சபதம்'என்ற பொருளில் இடம்பெறவுள்ளது.

வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம் மற்றைய எல்லாம் பிற.

குறள்

# வலம்புரி

## மாறிவரும் உலகம்

இன்று உலகின் மாற்றங்கள் மிக வேகமாக இடம்பெற்று வருகின்றது. எனினும் நாம் இன்னமும் பழமை வாத சிந்தனையிலும் எண்ணத்திலுமே மூழ்கிப்போயுள்ளோம். இவ்வாறு யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்.

அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பிராந்திய ஆய்வுப் பட்டறையொன்றில் உரையாற்றும் போதே பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் கூறிய கருத்து சகல தரப்பினரினதும் சிந்தனைக்குரியதாகும்.

இன்று உலகில் தகவல் தொழில் நுட்பம் வேகமாக வளர்ச்சி கண்டு வரும் வேளையில் நாம் மூட நம்பிக்கைகளிலும், மரபுவழிச் சம்பிரதாயங்களிலும மூழ்கிப் போய் அதிலிருந்து விடுபட முடியாதவர்களாக இருப்பது கண்கூடு.

இத்தகைய மூடநம்பிக்கைகளும், இறுக்கமான கொள்கைகளும் எமது இனத்தின் விடிவுக்கும், அபிவிருத்திக்கும் தடைக்கல்லாக அமைந்துள்ளது.


ஓர் இனம் மாறிவரும் உலகிற்கேற்ப மாற்றமுறவேண்டுமெனில் அவ்வினம் சார்ந்த கருத்துக்களும், மரபுவழிக் கோட்பாடுகளும் நெகிழ்ச்சித்தன்மையுடையவையாக இருப்பது அவசியமாகும்.

எந்த இனம் இறுக்கமான கொள்கைகளைக் கொண்டுள்ளதோ அந்த இனத்தால் உலகத்தின் வேகமான ஓட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாது.

இக் கருத்தை உணர்த்துவதாகவே துணைவேந்தரின் உரை அமைந்துள்ளது.

எனவே பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையாலே யென்ற தமிழ் கூறும் தத்துவத்தை தமிழ் இனம் யதார்த்த உலகில் நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு புதியனவற்றில் புகுந்து கொள்வது தமிழினத்தின் கலாசார பண்பாட்டு விழுமியங்களை சிதறடிப்பதாகவோ, சிதறடிக்க வேண்டுமென்பதோ பொருளல்ல. ஓர் இனம் தனது அடையாளச் சின்னங்களை சிதைத்துக் கொள்ளாமல் மாறிவரும் உலகில் சங்கமிப்பது காலத்தின் தேவையாகும்.

# ஆறுபடை வீடுகளிலொன்றான திருச்செந்தூர் பேறுகள் பல கொடுக்கும் பெற்றி கொண்டது



## வெள்ளி நற்சிந்தனை

நெல்லைநாட்டிலுள்ள தொன்மை வாய்ந்த தலங்களுள் ஒன்று திருச்செந்தூர். அவ்வூர் கடற்கரையில்அமைந்திருத்தலால்,நெல்லை நாட்டு நெய்தற்பதி எனத்தகும். அப்பதியின்தொன்மை,'சீர்கெழு செந்திலும், செங்கோடும், வெண்குன்றும்'என்ற சிலப்பதிகாரப் பாட்டால் இனிது விளங்கும். முற்காலத்தில் செந்தில் என்று வழங்கிய பதியே பிற்காலத்தில் திருச்செந்தூர் ஆயிற்று. திருச்செந்தூரில் முருகப்பெருமான் கோயில் கொண்டுள்ளார்.அப்பெருமான் அருள் பெற்ற தமிழ்ப்புலவர் பலராவர். அன்னவருள் தலை சிறந்தவர் நக்கீரர் என்பர். இப்புலவர் முருகனைக் குறித்துப் பாடிய பெருமை சான்ற பாட்டுத்திருமுருகாற்றுப் படை எனப்படும்.பத்துப் பாட்டுஎன்னும் பழந்தொகை நூலில் முதற் பாட்டாய் அமைந்தது திருமுருகாற்றுப்படையே முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளின் பெருமையும் முறையாக அப்பாட்டில் அமைந்திருக்கிறது ஆறு படை வீடுகளுள் ஒன்றாகிய திருச்செந்தூரை 'உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்' என்று திருமுருகாற்றுப்படை புகழ்ந்து போற்றுகின்றது.'கத்தும் தரங்கம் எடுத்தெறியும்' கருங்கடலின் அருகேசெந்திலாண்டவன் கோயில் சிறந்திருத்தலால் 'அலைவாய்' என்னும் பெயர் அதற்கு அமைவதாயிற்று.எத்திசையும் புகழ் மணக்க இனிதிருந்த அப்பதியை 'ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்' என்று நக்கீரர் நாவாரப் புகழ்ந்துரைத்தார். இப்புலவர் பெருமான் திருச்செந்தூர் முருகனிடம் பெரிதும் ஈடுபட்டவர் என்பது

'முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே-ஒரு கைமுகன்நான்'
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன்! நான்

என்று இவர் அருளியதாகக் கூறப்படும் பாட்டாலும் அறியப்படும். இத்தகைய நக்கீரதேவருக்கு அலைவாயிலில்ஒரு கோயில் இருந்ததாகக் கல்வெட்டு அறிவிக்கின்றது. இது நக்கீரர் பாட்டன்று என்பாருமுளர்.

### குமரகுருபரர்

திருச்செந்தூரில் முருகன் கண்கண்ட தெய்வமாய் அமர்ந்து அருள் புரிகின்றான் என்று மெய்யன்பர்கள் கருதுகின்றார்கள். திருச்செந்தூருக்கு இருபது கல் தூரத்திலுள்ள ஸ்ரீ வைகுண்டத்தில் சண்முகசிகா மணிக்கவிராயர் என்ற சைவசீலர் ஒருவர்இருந்தார்.அவருடைய அருமைப் பிள்ளை ஐந்து வயதாளவும் வாய்திறந்து பேச வகையறியாதிருந்தது. திருச்செந்தில் ஆண்டவர்க்கு வழிவழி அடிமையாகிய கவிராயர் குழந்தையோடு அப்பெருமான் கோவிலிற் போந்து நோன்பு செய்தார். விரதம் முடிந்தது. வரதரும் வாய் திறந்து பாடலுற்றார்.இவ்வாறு முருகன் அருளால்வாக்குப்பெற்றவரே குமரகுருபர அடிகள். இவர் பாடிய கந்தர் கலி வெண்பாவை'ஓதிக் கலி தீர்த்தார் எண்ணிறந்தவர் என்பர்.

## டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை

### பகழிக் கூத்தர்

இன்னும் தற்போதைய இராமநாதபுர மாவட்டம் என்னும் சேது நாட்டில் உள்ள சன்னாசிக் கிராமத்தில் வாழ்ந்த திருமாலடியார் ஒருவர்க்கு மைந்தராய்த் தோன்றிய பகழிக் கூத்தர் வயிற் நோயுற்றுவாடி வருந்தினார். குடரோடு துடக்கி முடக்கிய கொடிய நோய் அருந்திய மருந்தினால் தீராமையால், கூத்தர் செந்திலம்பதியை அடைந்து, கந்தவேளைக் கண் குளிரக்கண்டு, மனங் குளிரப் பாடினார். அந்நிலையில் சூலை நோய் நீங்கிச் சுகமுற்றார்.பகழிக் கூத்தர் பாடிய திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழில் அமைந்த ''பேராதரிக்கும் அடியவர் தம் பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும் பேறும் கொடுக்க வரும் பிள்ளைப் பெருமான் என்னும் பேராளர்'' என்ற பாட்டு இசைத்தட்டில் ஏறித் தமிழ் நாடெங்கும் இன்பம் பயக்கின்றது.கூத்தரது பிள்ளைத் தமிழ் செந்தில் முருகன் முன்னே அரங்கேற்றப்பட்டதென்பர்.

### வட மலையப்ப பிள்ளையன்

கடற் கரைக் கோவிலில் முருகவேள் ஆறுமுகங்களோடு விளங்குகின்றார். பொன் போல இயங்கும் அவ் வடிவத்தைச் சில நூற்றாண்டு கட்கு முன்பு கடலாடிகள் கவர்ந்து படகிலேற்றிச் சென்றார்கள். ஆண்டவன் உருவத்தைக் காணாத அடியார் ஆறாத் துயருற்றார்.கவலையுற்றஅன்பர் மனங்களிக்க ஆறுமுகப் பெருமான் சைவசமயசீலராய் விளங்கிய வடமலையப் பிள்ளையினுள்ளத்தில் தம் இருப்பிடத்தை உணர்த்தினார். 'காட்டுவித்தால்யாரொருவர் காணாதாரே' என்றபடிகருங் கடலில் கள்வர்கை விட்டுச் சென்ற பெருமானைச் சில அடையாளங்களாற் கண்டு பிள்ளையனும் பிறரும் ஆர்வத்தோடு எடுத்துக் கரை சேர்த்தனர். அப்பொழுது பாவலர்பாட்டிசைத்தார்கள். அடியவர் ஆரவாரித்தார்கள். அன்று வென்றிமாலைக் கவிராயர்பாடிய கண்ணிகள் இன்றும் திருச்செந்தூர் திருவிழாவில் பாடப்படுகின்றன.

ஓராறு சென்னியும்
சண்முகச் சேவையும்
ஒண்பொற் குழைக்காதும்
போரேறு வேலேந்து
செங்கையும் கண்டன்பர்
போற்று முருகரே! மாமால்
மருகரே!
காரேறு தண்டலை சூழும்
செழுந்தமிழ்க்
காவை வடமலையப்பன்
தொழுதிட
இப்போது தேவரீர் எழுந்
தருளின
தெல்லோர்க்கும் நல்ல
காலம்'

என்னும் கண்ணிகள் மேற்குறித்த செய்தியை உணர்த்துகின்றன.

இங்ஙனம் கருங்கடலினின்று ஆறுமுகச் செவ்வேளைக்கரையேற்றிப் புகழ் பெற்ற வடமலையப்ப பிள்ளையன் கார்காத்த வேளாள மரபினர். பொருந்து கல்வியும் செல்வமும் பூத்தவர். மதுரைமாநகரில் நாயக்கமன்னர் அரசு செலுத்திய காலத்தில் அவர் ஆணையால் தென்பாண்டி நாட்டில் ஏற்றமும் தோற்றமும் பெற்றிருந்தவர்.சைவம், வைணவம் ஆகிய இருசமயங்களையும் நன்கு ஆதரித்தவர்.

'செஞ்சிக்கும் கூடலுக்கும் தஞ்சைக்கும் ஆணைசெல்லும் செங்கோல் வடமலேந்திரன் எங்கள் ஊரே' எனறுமுக்கூடற்பளளு நாடகத்தில் புகழப் பெற்றவர் இவரே!

### பொற் பதக்கம்

இவ்வட மலையார் திருச்செந்தூருக்கு ஒருமுறை சென்றிருந்த போது கோயிற் குருக்கள் தட்டு மாலையோடு போந்து வரவேற்றார். தட்டில் இருந்த கட்டியாரத்தை அவர் கழுத்தில் அணிந்தார். பூமாலையைப் பிளளையன் கழற்றிய போது, முருகன்திருமேனியில் இருநத பொற்பதக்கமும் அதனோடு சேர்ந்திருக்கக் கண்டார். அளவிறநத வருத்தமுற்றார். அறியாமல் நேர்ந்த பிழையை எண்ணிக் குருக்களும் குறுகி நின்றார். பிளளையன் ஆகம நூலோர் கருத்தறிந்து மறுநாள் முருகப் பெருமானுக்கு முழுக்காப்பிட்டு, திருவாபரணம் தம் கழுத்தில் விழுந்ததற்குக் கழுவாயாகச் செந்தில மாநகரின அருகேயுள்ள ஒரு சிற்றூரில் உள்ள சிறந்த நிலங்களை அப்பெருமானுக்கு அர்ப்பணஞ் செய்தாா. அன்று முதல் அவ்வூர்பதக்கம் என்று பெயர் பெற்றது. வடமலையாரும் அவர் வழித்தோன்றிய பெரியாரும் நியமித்த கட்டளைகளும், சிறப்புக்களும் திருச்செந்தூரில் இன்றும் நடை பெறுகின்றன.

## தினசரி தியானம்

### ஆசனப் பயிற்சி

எல்லா மாணாக்கரும் ஆசனங்கள் செய்யவேண்டும். குறிப்பாகச் சிரசானம் செய்ய வேண்டும். ஆசனங்களின் அரசன் எனப்படும் சிரசாசனம் மூளைக்குத் தேவையான இரத்தத்தைச் செலுத்துகிறது. மூளைப்பகுதி முழுவதும் இர்த்த ஓட்டம் பெறுகிறது. இதனால் நல்ல நினைவாற்றலைப் பெறுவீர்கள். பழக்கத்தால் இதன் உண்மையை உணர்வீர்கள்.

சுவாமி சிவானந்தர்

# இல. கிரிக்கெட் அணிக்கு உத்தியோக பூர்வ ஆடைகள்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணிக்கு உத்தியோக பூர்வ ஆடைகளை வழங்கும் அனுசரணை ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் ஏ. ஜே. ஸ்போட்ஸ் நிறுவனம் கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை விடுத்த வேண்டுகோளையடுத்தே இந்நிறுவனம் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதாக இடைக்கால குழுத்தலைவர் ஹேமக அமரசூரிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச தரம் உடைய விளையாட்டு ஆடைகளை உற்பத்தி செய்துவரும் இந்நிறுவனம் பாகிஸ்தான், பங்களாதேஷ் தேசிய கிரிக்கெட் அணிகளுக்கான உத்தியோக பூர்வ ஆடைகளை விநியோகித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-3)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கைதாகி காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமைமு.ப.10 மணிக்கு யாழ். கோட்டை முனியப்பர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் அண்மையில் தென்னிலங்கைச் சிறைச்சாலைக்குச் சென்று திரும்பிய மேற்படி சங்க உறுப்பினர்கள் உண்மை நிலையை எடுத்துக் கூறுவதுடன், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்படவுள்ளது. (உ)

## குமாரின் உருவப்படம் திரை நீக்கம்

(கொழும்பு)

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில்,எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அமரர் குமார் பொன்னம்பலத்தின் உருவப்படம் திரைநீக்கம் செய்யப்படவுள்ளது.

தமிழ்ச்சங்கத்தின் தலைவர் கலாசூரி இ. சிவகுருநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஆசியுரையை பிரம்மஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள நிகழ்த்துவார்.

வவுனியா மாவட்ட நீதிபதி மா.இளஞ்செழியன் உருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைப்பார். (உ)

அமெ'

அஸ்லிவில்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்

வடபகுதியின் பாதுகாப்பு நிலைவரங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் கரையோரப்பாதுகாப்பு மற்றும் படைகளுக்கான பயிற்சி உதவிகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது (இ43)

தூதுவா

தையில் கலந்துகொள்வோர் விபரம் மற்றும் கலாநிதி அன்ரன்பாலசிங்கம் வன்னிக்குச் செல்வதற்கான போக்குவரத்துஒழுங்குகள் குறித்த முடிவுகள் நேற்றைய சந்திப்பில் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## புலிகளே.

நேரில் சென்று பார்வையிட்டனர்.

இக்குழுவினர்சாவகச்சேரிப் பகுதிக்கும் சென்று அங்குள்ள நிலைவரங்களையும் பார்வையிட்டுக் கொண்டு, முகமாலையில் உள்ள இராணுவ முன்னரங்கநிலைகளுக்குச்சென்று, பாதுகாப்பு நிலைமைகளை நேரில் பார்வையிட்டனர்.

அமெரிக்கஇராஜாங்க பிரதி அமைச்சர் ஒருவர் இராணுவ முன்னரங்கநிலைகளை பார்வையிட்டமை இதுவே முதற்தடவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நண்பகல் 12.45மணியளவில் இராஜாங்க பிரதி அமைச்சர் ஆமிடேஜ் யாழ். ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

இக்கலந்துரையாடலில் வைத்தியகலாநிதி தயாளன் அம்பலவாணர், பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், சரோஜா சிவச்சந்திரன், யாழ். பல்கலைக்கழக மாணவப் பிரதிநிதி எஸ்.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது, யாழ் குடாநாட்டு நிலவரங்கள் குறித்து விளக்கிக் கூறிய பிரதிநிதிகள்;

அமெரிக்கா தமிழீழ விடுதலைப் புலிகள் மீதுவிதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் தமிழ் மக்களின் அபிலாசைகளை, சுயநிர்ணய உரிமை, தாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் அங்கீகரிக்க வேண்டுமென்றும், விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்றும் வலியுறுத்திக் கூறினர்

இதேவேளை யாழ். விஜயத்தை முடித்துக் கொண்டு இக்குழுவினர் நேற்று கொழும்பு திரும்பினர்.

(இ- 77, 6, 43)


திகதி மாற்றம்

சங்குநாதத்தின்

- விஞ்ஞானப் புதிர்
- குறுக்கெழுத்துப் போட்டி,
- இவரைத் தெரியுமா?

ஆகியவற்றுக்கான விடைகளை 27 8 2002 ற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

(ஆ-ர்)


அரசு..

பேச்சுவார்த்தை முடிவடைந்தும் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள முக்கியமான பேச்சுவார்த்தைகளில் பிரதமர் கலந்து கொள்வார்.

இப் பேச்சுவார்த்தைகளில் இலங்கையின் முதலீட்டு நடவடிக்கைகளுக்கான உதவிகளை ஐக்கிய நாடுகள் சபையிடம் கோருவார்.

அதேவேளை 18 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதா இல்லையா என்பதை உயர் நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும். எனினும் சர்வஜன வாக்கெடுப்பு தேவையில்லை என்றே நாம் கருதுகிறோம் அவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு நடைபெற்றாலும் அதைப்பற்றிக் கவலைப்படப் போவதில்லை மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள். இதனால் சர்வஜன வாக்கெடுப்பில் நாம் வெற்றி பெறுவோம் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

(த)


# Jaffna College Institute of Technology

## Vaddukoddai, Sri Lanka.

Students are welcome to register for the following courses to commencing From the first week of September 2002

## Technician Diploma Courses (NDT) Level

- Electronic & Telecommunication Engineering
- Mechanical Engineering

Duration 3 years (Full Time)

- Civil Engineering

Duration 2 years (Full Time)

## Diploma Courses

- Advanced Diploma in Computing
- Diploma in Computer Programming & Data Processing
- Diploma in Draughtsmanship (Civil)

Duration 1 year (Full Time)

## Technician Certificate Courses

- Basic Engineering
- Electronics

Duration 1 year (Full Time)

## Certificate Courses in Business & Scientific Applications

- MS Word
- MS Excel
- MS Access
- d Base III+
- Pascal
- C/C++
- Fox Pro
- Java
- Visual Basic 6.0
- MS Power Point
- Computer Hardware

DURATION 3 MONTHS (Day & EveningClasses)

## Craft courses (தமிழ் மொழி மூலம்)

- Electrical Wiring & Installation Practice (மின் இணைப்பும் நிர்மாணமும்)
- Automobile Technology (மோட்டார் வாகனத் தொழில்நுட்பம்)
- Radio & T. V. Servicing (றேடியோ ரீவி பழுதுபார்த்தல்)
- Air-Conditioning & Refrigeration (குளிரூட்டுதலும் காற்றுப் பதனிடுதலும்)
- Mechanical Craftsman Practice (லேத் வெல்டிங், பிற்றிங் பயிற்சி)

Duration 1 year (காலம் 1 வருடம்)

- Foundry Practice (வார்ப்புப் பயிற்சி)

Duration 6 Months (காலம் 6 மாதங்கள்)



# விமானசேவை அறிவித்தல்

EXPO விமான சேவையின் வெள்ளி, சனி மாலை சேவையும், ஞாயிறு, திங்கள்காலைசேவையும், தவிர்க்க முடியாதகாரணத்தினால்ரத்துச்செய்யப்பட்டுள்ளதால் அத்தினங்களில் பதிவு செய்த பயணிகள் உடன் யாழ். அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பயணிகளின் பயணச்சீட்டிலக்கம்,

அடையாள அட்டை இலக்கங்கள் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 11443 | 554452812 V | 9791 | 300587308 |
| 11442 | M1945177 | 9789 | 009006334 |
| 10344 | VE794679 | 9792 | 037889172 |
| 11936 | 655120564 V | 9819 | JS462850 |
| 11935 | A11591806 | 9821 | JS462459 |
| 1985 | 580757750 X | 9823 | JS462458 |
| 10301 | 622582207 V | 9820 | JS462851 |
| 11418 | 605460690 X | 9822 | JS462460 |
| 1549 | (CHD) | 9824 | V11655442 |
| 1548 | 616980700V | 10334 | M1907788 |
| 1550 | (CHD) | 8713 | L3437329 |
| 1547 | 602000516 V | 8712 | L3436890 |
| 6161 | M338634 | 10558 | M1142941 |
| 6162 | ML309934 | 11414 | 412760123 |
| 9790 | 015005223 | 11415 | VG094145 |

EXPO
AVIATION (PVT) LTD
JAFFNA.

(C-4877)



இலங்கை மின்சார சபை

யாழ். பிரதேச அலுவலகம்

மின்தடை பற்றிய

# Our Diplomas Guide the Students to the Examinations of the following bodies

- ★ CITY & GUILDS OF LONDON INSTITUTE
- ★ ENGINEERING COUNCIL OF LONDON
- ★ AUSTRALIAN COMPUTER SOCIETY (A C S)
- ★ BRITISH COMPUTER SOCIETY (B C S)

We are
Memder of Association of Computer training organisations of SriLanka
& Educational affiliate of British Computer Society

## ⋆ Facilities

- Library
- Hostel
- Sports

Application forms are available at

- J C I T, Vaddukoddai
- Undergraduate department, Jaffna College (Hospital Road, Jaffna)

## TECHNICAL COMPETENCE IS THE KEY TO ECONOMICSELF RELIANCE

**DIRECTOR**
Jaffna College Institute of Technology
Vaddukoddai.

(C—4878)

Tel No:070-213139 E-Mail:jcit@sltnet. 1K



# மின்தடை பற்றிய அறிவித்தல்

2002.08.24ம்திகதி சனிக்கிழமை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, அச்சுவேலி, வடமராட்சிப் பகுதி, கந்தரோடை, சண்டிலிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டை, தொல்புரம், பண்டத்தரிப்பு, மானிப்பாய், உடுவில் ஆகிய பகுதிகளுக்கு காலை9.00மணிதொடக்கம் மாலை4.00மணிவரை அவசர பராமரிப்புவேலைகளின் பொருட்டு மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

இதேநாளில் காலை 9.00மணிதொடக்கம் பிற்பகல் 1.00மணிமட்டும் பின்வரும் இடங்களுக்கு மின்சாரம் தடைப்பட்டிருக்கும். யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்டபகுதி கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய், திருநெல்வேலி, மருதனார்மடம், இணுவில், தாவடி, சுதுமலை, ஆனைக்கோட்டை, கொக்குவில, கோண்டாவில், நவாலி, நாச்சிமார் கோயில், கோம்பயன்மணல்;

வேலைகள் பூர்த்தியடைந்ததும்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக மின்வழங்கப்படும் என்பதனையும் பாவனையாளர்களுக்கு இத்தால் அறியத்தருகிறேன்.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

**பிரதேச மின் பொறியியலாளர்**
இலங்கை மின்சாரசபை,
யாழ். பிரதேசஅலுவலகம்,
சுன்னாகம்;

சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும இலங்கை மின்சார சபை.

(கி-4876



இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில உள்ள அவாகளது அச்சகத்தில் 23-08-2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.